<u>**DEPOSITION OF WITNESS**</u>

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | C C No. 108 / 2024 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 1 |

| | | |
|---|---|---|
| Name | : | சத்தீஷ் |
| Father's Name | : | பெரியண்ணன் |
| Village | : | தம்பிரான்பட்டி |
| Taluk | : | பெரம்பலூர் |
| Calling | : | சுயதொழில் |
| Religion | : | இந்து |
| Age | : | 36 |
| ACCUSED | | ரெங்கநாதன் – ஆஜர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.06.2025.

<u>**முதல் விசாரணை:–**</u>

நான் தற்போது பெரம்பலூர் மாவட்டம், தம்பிரான்பட்டி கிராமத்தில் குடியிருந்து மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகின்றேன். புகார்தாரர் செந்தில்குமாரை எனக்கு தெரியும். அவர் தற்போது சிங்கப்பூரில் இருந்து வருகின்றார். வழக்கு விபத்தில் இறந்து போன ராஜேந்திரனை எனக்கு தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு இரவு சுமார் 07.00 அல்லது 08.00 மணியளவில் நான் பெரம்பலூரில் இருந்து மளிகை ஜாமான்கள் வாங்கிக்கொண்டு திரும்ப வந்து கொண்டிருந்த போது செஞ்சேரி கிராமத்தில் விபத்து நடைபெற்றது. நான் வரும் போது செந்தில்குமார், ராஜேந்திரன் ஆகியோர் விபத்து ஏற்பட்டு செஞ்சேரி கிராமத்தில் ரோட்டிலேயே விழுந்து கிடந்தார்கள். நான் போய் பார்த்த போது காயம்பட்டவர்கள் செந்தில்குமார் மற்றும் ராஜேந்திரன் என்று தெரிந்து கொண்டேன், இருவரும் எனக்கு மாமா உறவு வேண்டும். நான் சம்பவ இடத்தில் விசாரித்த போது செந்தில்குமாரும், ராஜேந்திரனும் இருசக்கர வாகனத்தில்

செஞ்சேரியில் இருந்து தம்பிரான்பட்டிக்கு செல்லும் வழியில் திரும்பும் போது கார் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன். நான் போய் பார்த்த போது விபத்தை ஏற்படுத்திய கார் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தது. அந்த காரின் பதிவு எண் T N 12 D 5646 என்று நினைக்கின்றேன். நான் போய் பார்த்த போது விபத்தை ஏற்படுத்திய காரை ஓட்டி வந்த ஓட்டுநர் அங்கு இருந்தார், அவரின் பெயர் ரெங்கநாதன் என்பதாகும். அந்த நபர் ஆஜர் எதிரி தான். காயம்பட்ட செந்தில்குமாரையும், ராஜேந்திரனையும் ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். காயம்பட்ட ராஜேந்திரன் திருச்சியில் இருந்த மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது விபத்து ஏற்பட்டு சுமார் 10 நாட்களில் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டார். விபத்து சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**( சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி வேண்டி அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

போலீசார் என்னை விசாரிக்கும் போது கடந்த 13.01.2023–ம் தேதியன்று இரவு 07.45 மணிக்கு நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த பிரபு என்பவரும் இருசக்கர வாகனத்தில் செட்டிக்குளம் பிரிவு ரோட்டிற்கு அருகில் வரும் போது எங்கள் ஊரைச்சேர்ந்த செந்தில்குமார் என்பவர் அவருடைய இருசக்கர வாகனத்தில் அவரது சித்தப்பா ராஜேந்திரன் என்பவரை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு செஞ்சேரி கிராம ரோட்டில் இருந்து வடக்கில் இருந்து தெற்கு நோக்கி செட்டிக்குளம் பிரிவு ரோட்டிற்கு வந்த போது பெரம்பலூர் – துறையூர் ரோட்டில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த ரெங்கநாதன், T N 12 D 0567 என்ற காரை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து செந்தில்குமார் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் பக்கவாட்டில் மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்று சொல்லியுள்ளேன். போலீசார் விசாரணையில் நான் சொல்லியுள்ளது போல் தான் சம்பவம் நடைபெற்றது.

**குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்)**

விபத்தில் சம்மந்தப்பட்ட ராஜேந்திரன் மற்றும் செந்தில்குமார் ஆகியோர் எனக்கு நெருங்கிய உறவினர்கள் என்றால் இல்லை. விபத்து சமயத்தில் நானும், பிரபுவும் பெரம்பலூரில் இருந்து தம்பிரான்பட்டிக்கு செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். விபத்து நடைபெற்றதை நான் நேரில் பார்க்கவில்லையென்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய நபரை அங்கிருந்த நபர்கள் தான் எனக்கு காட்டினார்கள் என்றால் சரிதான். விபத்து குறித்து யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. விபத்து சாலையின் மையப்பகுதியில் நடைபெற்றது. செட்டிக்குளம் பிரிவு ரோட்டில் வேகத்தடை உள்ளது, பெரம்பலூர் – துறையூர் ரோட்டில் செஞ்சேரி கிராமத்திற்கு செல்வதற்கு முன்னால் ஒரு வேகத்தடை உள்ளது. விபத்து ஏற்பட்டவுடன் சம்பவ இடத்தில் நிறைய பொதுமக்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கும், இந்த விபத்திற்கும் சம்மந்தம் இல்லையென்றும், விபத்தில் இறந்து போனவர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. செந்தில்குமாரும், ராஜேந்திரனும் எந்த திசையில் இருந்து எந்த திசைக்கு சென்றார்கள் என்றால் செஞ்சேரியில் இருந்து செட்டிக்குளம் பிரிவு ரோட்டிற்கு சென்றார்கள்.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**